**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் 14*

## *உபத்திரவம் – 08*

## *சபை உபத்திரவத்திற்குள் கடந்து செல்லுமா? (03)*

## *சபை உபத்திரவத்திற்கு முன்னரே இரகசிய வருகையினால் எடுத்துக்கொள்ளப்படும்.*

### *யார் அந்த 24 மூப்பர்கள்?*

*வெளிப்படுத்துதல் புத்தகத்தின் காலவரிசைப் பட்டியலை இப்போது பார்க்கலாம்.*

*அதிகாரம் 1, கிறிஸ்து பரலோகத்தில் இருப்பதையும், யோவான் கிறிஸ்துவைக் குறித்தும் பரலோகத்தில் இருக்கும் மற்ற பொதுவான காரியங்களை குறித்து தரிசனம் கண்டதையும் நாம் காண்கிறோம். கிறிஸ்து யோவானிடம் நடக்கவிருக்கும் காரியங்களை தாம் வெளிப்படுத்தப்போவதாக கூறினார்.*

*அதிகாரம் 2 மற்றும் அதிகாரம் 3, அந்த காலத்தில் அப்போது இருந்த சபைகளுக்கான தனிப்பட்ட கடிதத்தை பற்றியது. இது எதிர்காலத்தில் வர இருக்கும் சபைகளின் வகையின் மாதிரியாகவும் உள்ளது.*

*அதிகாரம் 4, யோவான் பரலோகத்தில் எடுக்கப்பட்டு அங்கு விவரிக்கப்பட்ட சில நபர்கள் இருப்பதை நாம் காண்கிறோம்.*

***வெளி 4:4,*** *அந்தச் சிங்காசனத்தைச் சூழ இருபத்துநான்கு சிங்காசனங்களிருந்தன; இருபத்துநான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி அந்தச் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன்.*

*வெளிப்படுத்துதல் புத்தகத்தின் 6ம் அதிகாரம் வரை உபத்திரவம் தொடங்கவில்லை. அதிகாரம் 6ல் தொடங்கி அதிகாரம் 19 வரை உபத்திரவம் நடைபெறுவதை நாம் காணமுடிகின்றது.*

***யார் இந்த 24 மூப்பர்கள்?***

1. ***இவர்கள் தேவதூதர்கள் அல்ல***

*இவர்கள் யூதர்கள் அல்லது அபோஸ்தலர்கள் அல்லது தேவதூதர்கள் என கூறுவதற்கான நிறைய கோட்பாடுகள் உள்ளன.*

1. *தேவதூதர்கள் மூப்பர்களாக முடியாது. ஏனென்றால் வேதாகமத்தில் எங்கேயும் தேவதூதர்கள் வெள்ளை அங்கி அணிவதில்லை.*
2. *இரண்டாவதாக, அவர்களை மூப்பர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இது கிரேக்க மொழியில் வயதான அல்லது முதிர்ந்த மக்களை குறிக்கிறது. தேவதூதர்களை குறிக்க அந்த வார்த்தை எப்போதும்*

*பயன்படுத்தப்படவில்லை மேலும் தேவதூதர்கள் எப்போதும் ஒரே வயது தான். அவர்களின் வயது அதிகரிப்பதில்லை!!*

3. *மூன்றாவதாக,* **வெளி** ***4:10-11,*** *[10]இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது bகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து: [11]கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்."*

   *தேவனின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்தும் அதிகாரமோ அல்லது அனுமதியோ தேவதூதர்களுக்கு எப்போதும் அளிக்கப்பட்டதில்லை.*

4. *நான்காவதாக, அவர்கள் தங்கள் கிரீடத்தை வைத்தார்கள். தேவதூதர்கள் கிரீடம் ஏதும் அணிய மாட்டார்கள். இந்த கிரீடங்கள் சாதரன கிரீடம் அல்ல. இதை வெற்றியின் கிரீடம் (victor's crown) என கூறுவர்.*

5. *முடிவாக* ***வெளி 5:9-10,*** *இல், தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோமென்று புதிய பாட்டைப் பாடினார்கள்.*

*தேவதூதர்கள் எப்போதும் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்படவில்லை. அதனால், அவர்கள் தேவதூதர்கள் அல்ல என்பதை நாம் தைரியமாக கூறலாம்.*

## *2. அவர்கள் பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் அல்ல*

*அவர்கள் ஒவ்வொருவரும் இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்தை சேர்ந்த பழைய ஏற்பாட்டுகால பரிசுத்தவான்கள் என்பது மற்றொரு வாதம். இதற்கும் நாம் எதிர்வாதம் அளிப்போம்.*

*மீண்டும்,* ***வெளி*** *5:9இல், அவர்களுடைய பாடலானது, "நீர் எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, "*

எல்லா பழைய ஏற்பாட்டுகால பரிசுத்தவான்களும் தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன்னரே இறந்து போய்விட்டனர்.

இந்த தரிசன நேரத்தின் போது, முழு இஸ்ரவேல் தேசம் இன்னமும் மீட்கப்படவில்லை. இந்த மூப்பர்கள் அதே காரணத்திற்காக உபத்திரகாலத்தில் உள்ள பரிசுத்தவான்களின் பிரதிநிதிகளாக இருக்க முடியாது. யோவானின் தரிசனத்தின் போது அனைவரும் மாறவில்லை.

இரண்டாவதாக. அவர்கள் வெற்றியின் கிரீடத்தை அணித்திருந்தனர். இதனை இஸ்ரவேலுக்கு தருவதாக என்றும் வாக்குத்தத்தம் அளிக்கப்பட விடவில்லை. இது சபைக்கு மட்டுமே வாக்குத்தத்தமாக அளிக்கப்பட்டது.

இந்த இருபத்துநான்கு மூப்பர்களும் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுகால பரிசுத்தவான்களின் பிரதிநிதிகளா?

அல்ல,

ஏனென்றால் பழைய ஏற்பாட்டுகால பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல் உபத்திரவகால துவக்கத்தில் அல்ல மாறாக அதற்கு பின்னரே நடைபெறும் என்று சில வாக்கியங்களில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**தானியேல்** *12:1-2 & 11-13; 1.* உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும்

*விடுவிக்கப்படுவார்கள். 2. பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.*

*11. அன்றாடபலி நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்காலமுதல் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூறு நாள் செல்லும். 12. ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான். 13. நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு; நீ இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய் என்றான்.*

***ஏசாயா** 26:19, மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடேகூட எழுந்திருப்பார்கள்; மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்; உம்முடைய பனி பூண்டுகளின்மேல் பெய்யும் பனிபோல் இருக்கும்; மரித்தோரைப் பூமி புறப்படப் பண்ணும்.*

***ஏசாயா** 25:8, அவர் மரணத்தை ஜெயமாய் விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரேஇதைச் சொன்னார்.*

*இஸ்ரவேலின் உயிர்த்தெழுதல் உபத்திரவகால முடிவில் தெளிவாக வைக்கபட்டுள்ளது.*

இந்த இருபத்திநான்கு மூப்பர்களும் புதிய ஏற்பாட்டுகால பரிசுத்தவான்களின் பிரதிநிதிகளாகும்.

## 1. சிங்காசனத்தின் மீது அமர்தல்

கிறிஸ்துவுடன் சேர்ந்து ஆள்வதற்கான அதிகாரத்தை புதிய ஏற்பாட்டுகால பரிசுத்தவான்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

**வெளி** *2: 26-27,* [26]ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். [27]அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள்.

**மத்தேயு** *19:28,* அதற்கு இயேசு: மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயம் தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**லூக்கா** *22:30,* நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார்."

***1 கொரிந்தியர் 6:1-2,*** *[1]உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன?*
*[2]பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?*

***எபேசியர் 2:5-6,*** *[5]அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.*
*[6]கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.*

***எபேசியர் 1:22-23,*** *[22]எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி,*
*[23]எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.*

*சபைக்குதான் கிறிஸ்துவுடன் சேர்ந்து ஆட்சி செலுத்தும் உரிமை உள்ளது என்பதை மேற்கூறிய வசனத்திலிருந்து நாம் தெளிவாக காணலாம்.*

## *2. வெற்றியின் கிரீடம் (Victor's crown)*

*வெற்றிகரமாக முடித்து இயேசுவிற்காக வெற்றியை வென்றவர்களுக்கே வெற்றியின் கிரீடம் (Victor's crown) கிறிஸ்து வாக்குத்தத்தம் கொடுத்தது போலவே அணியப்பட்டது.*

*வேதவாக்கியங்களில் ஐந்து விதமான கிரீடங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் கிறிஸ்தவ வாழ்வின் ஒவ்வொரு அம்சங்களோடு தொடர்புடையது. நீங்கள் இந்த பூமியில் இருந்த போது தேவனுக்கு செய்த சேவையை இந்த கிரீடங்கள் பிரதிபலிக்கிறது.*

### *a) அழிவில்லா கிரீடம்*

*1 **கொரிந்தியர்** 9:25, பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.*

*இதை முதல் நிலையில் உள்ள விசுவாசிகள் பெறுவார்கள். தங்கள் பாவங்களின் மீது ஜெயம் கொண்டவர்களுக்கு இந்த கிரீடம் வழங்கப்படும். இந்த கிரீடம் அவர்களுடைய சுய கட்டுப்பாடிற்கானது. இதனால் தான் நான் பரிசை பெருவதற்காக என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்று அபோஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். ஆனால் என்னிடம் சுய கட்டுப்பாடு இல்லாமல் மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணி ஆகாதவனாய்ப் போக எனக்கு விருப்பமில்லை.*

## *b) நீதியின் கிரீடம்*

*2 **தீமோத்தேயு** 4:8, இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.*

*இந்த இரண்டாம் நிலைக்கான கிரீடம் இவ்வுலகில் நீதிமானாய் வாழ்பவருக்கு செல்லும். இந்த மக்கள் இயேசுவின் வருகையை எதிர்நோக்கி காத்திருப்பார்கள்.*

## *c) ஜீவ கிரீடம்*

*__வெளி__ 2:10, நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.*

*__யாக்கோபு__ 1:12, சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.*

*இது கிறிஸ்தவர்களுக்கான மூன்றாம் நிலை கிரீடம். தங்கள் வாழ்க்கையில் சோதனைகள் மற்றும் துன்புறுத்துதலை எதிர்கொண்டாலும் கூட, உயிர்த்தியாகம் நேர்ந்தாலும் கூட அழைப்பில் முன்னேறிச் செல்பவர்களுக்கே இந்த கிரீடம் கொடுக்கப்படும்.*

*பரீட்சையும் சோதனையும் கிறிஸ்தவ வாழ்வின் ஓர் அங்கம். அநேக கிறிஸ்தவர்கள் பரீட்சையும் சோதனையும் எதிர்கொள்ளும் போது தேவன் அழைத்த அந்த வழியில் தொடர்ந்து ஓடாமல் திரும்பிவிடுகின்றனர்.*

### *d) சந்தோஷ கிரீடம்*

***பிலிப்பியர் 4:1**, ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்.*

***1 தெச்சலோநிகர் 2:19**, எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்;*

*மற்றவர்களை தேவனின் நீதிக்குள்ளாக நடத்துபவர்களுக்கு அல்லது மற்றவர்கள் தேவனின் நீதியை நோக்கும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் கனிதரும் வாழ்கையை வாழ்பவர்களுக்கு இந்த கிரீடம் வழங்கப்படும்.*

*வெகுமதிகள் நாம் எவ்வாறு வாழ்கிறோம் மற்றும் நாம் என்ன செய்கிறோம் என்பதற்காக மட்டும் அல்ல. அவைகள் நாம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்திற்காகவும், மற்றவர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் மற்றும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதற்காகவும் கூட.*

## *e) மகிமையின் கிரீடம்*

*1 **பேதுரு** 5:4, அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.*

*நம்முடைய அழைப்பை நிறைவேற்றுவதும் மற்றும் தேவன் நமக்கு அளித்த வேலையை முடிப்பதே மிகப்பெரிய சாதனையாகும். இவ்வுலகில் வெற்றிக்கு வெவ்வேறு அர்த்தங்கள் இருக்கலாம் மேலும் அவர்கள் அதை வெவ்வேறு முறையில் அளப்பார்கள். ஆனால் வெற்றி என்பது தேவனின் சித்தத்தை உங்கள் வாழ்வில் முடிப்பதே ஆகும்.*

*இந்த கிரீடம் போதகர்களுக்கு மற்றும் ஊழியர்களுக்கு மட்டுமல்ல. ஆனால் வாழ்வில் தன்னுடைய நோக்கத்தை அறிந்து அந்த வேலையை நிறைவேற்றுபவர் யாராயினும் அவர்களுக்கும் இந்த கிரீடம் வழங்கப்படும்.*

*இந்த வேதவாக்கிய மேற்கோளானது உத்தமமாய் தன் வேலையை முடித்த ஊழியக்காரர்களை குறிக்கிறது. ஆனால் இந்த கிரீடம் போதகர்களுக்கு மட்டுமல்ல. தேவன் தனக்கு கொடுத்த வேலையை அறிந்து அதை நிறைவேற்றுபவர் யாராயினும் அவர்களுக்கும் இது வழங்கப்படும்.*

*நான் ஏன் இந்த விஷயத்தில் இத்தகைய விரிவான விளக்கத்தை கொடுக்க வேண்டும்?*

*ஏனென்றால் இயேசு கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்களே இந்த மூப்பர்கள் என்ற உண்மையை நாம் நிறுவ வேண்டும். பிறகு மகா உபத்திரவ சமயத்தில் சபை*

இயேசு கிறிஸ்துவோடு இருக்கும் என்பதில் நாம் உறுதி கொள்ளலாம்.

ஒரு கணம் இந்த முழு பட்டியலையும் நாம் பாப்போம்,

1. பாவம் இயல்பின் மீது தேர்ச்சி பெற்றவர்களுக்கு **அழிவில்ல கிரீடம்**.
2. இவ்வுலகில் நீதிமானாய் வாழ்வோருக்கு **நீதிமானின் கிரீடம்**.
3. சோதனைகளை மீறி தேவ சித்தத்தில் முன்னேருவோருக்கு **ஜீவகிரீடம்**.
4. மற்றவர்களை கிறிஸ்துவிலும் அவருடைய நீதியிலும் வழிநடத்துபவருக்கு **சந்தோஷ கிரீடம்**.
5. உங்களுடைய அழைப்பை நிறைவேற்றி கொடுக்கப்பட்ட வேலையை முடிப்பவர்களுக்கு **மகிமையின் கிரீடம்**.

எந்த ஒரு பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கும் கிரீடம் அளிப்பதான அத்தகைய வாக்குத்தத்தம் அளிக்கப்படவில்லை என்பது இதிலிருந்து நமக்கு தெரிகிறது. இது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டோருக்கு மட்டுமே ஆகும். அதனால், பூலோகத்தில் மகா உபத்திரவம் நேர்ந்த சமயத்தில் சபை இயேசு கிறிஸ்துவோடு இருந்தது என நாம் உறுதியுடன் கூறலாம்.

### *3. வெள்ளை அங்கியை அணிதல்*

*வெள்ளை அங்கி என்பது நம் இரட்சிப்பின் போது கிறிஸ்துவின் நீதி நமக்குள் சுமத்தப்பட்டதற்கான அடையாளமாகும்.*

***வெளி** 3:5, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்.*

***வெளி** 19:7-8, [7]நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். [8]சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லியவஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.*

*அதனால், மீட்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த மூப்பர்களிடமே இந்த வெள்ளை அங்கி இருக்கிறது.*

### *4. எண் 24, ஏன்?*

*இது வெறும் எண் தானா அல்லது 1 நாளாகம் 24ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலா? இந்த அதிகாரத்தில் இஸ்ரவேலர்களை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா?*

*1* ***நாளாகமம்*** *24:5, எலெயாசாரின் புத்திரரிலும் இத்தாமாரின் புத்திரரிலும், பரிசுத்த ஸ்தலத்துக்கும், தேவனுக்கு அடுத்த காரியங்களில் பிரபுக்களாயிருக்கும்படிக்கும், இவர்களுக்கும் அவர்களுக்கும் வித்தியாசம்பண்ணாமல் சீட்டுப்போட்டு அவர்களை வகுத்தார்கள்.*

*அவர்கள் தேவாலயத்திலே தேவனுக்கு சேவை செய்து கொண்டிருந்தனர்.*

***எபிரெயர்*** *8:4-5,* [4]*பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார்; ஏனெனில், நியாயப் பிரமாணத்தின்படி காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே;* [5]*இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணுகையில் மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்."*

*தேவாலயத்தின் ஒழுங்கை பற்றியதான அழகான விளக்கத்தை எபிரெயர் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும், 24 ஆசாரிய வகுப்புகளை பற்றிய எந்தவொரு மேற்கோளும் இல்லாதிருப்பது குறிப்பிடத்தக்கவொன்று.*

***எபிரெயர்*** *9:11-12,* [11]*கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும்,* [12]*வெள்ளாட்டுக்கடா, இளங்காளை*

*இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.*

*இயேசு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியனாக மட்டுமல்லாமல் நமக்காக தேவனுக்கான பலியாகவும் சென்றுள்ளார்.*

*நாளாகமம் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவற்றிற்கும் இடையேயான தொடர்பு ஆசாரிய ஒழுங்கின் ஒரே எண் குறிப்பு அதாரம் இல்லை. Single numerical reference to a priestly order is by no means conclusive evidence of a correlation between the accounts in Chronicles and Revelation.*

*வேதாகமத்தில் ஏசாயா 6 இல் சேராபீன்கள் (seraphim) தேவனை சேவித்தனர் என்று விளக்குகிறது. பரலோக சபையில் சேவிப்பவர்கள் ஒரு தேவதூதருக்கான ஒழுங்கில் தம்மை சேவிக்க வேண்டும் என்று தேவன் நம்மிடம் கூற விரும்பினால் நிச்சயமாக நமக்கு தேவன் வெளிப்படுத்தியிருப்பார். இந்த 24 மூப்பர்களும் 1 நாளாகமம் 24இல் குறிப்பிடப்பட்டவர்களை குறிக்குமானால், அவர் எப்படி நமக்கு சொல்லமால் விட்டுவிடுவோரா?*

## முடிவுரை:

*இந்த 24 மூப்பர்களுக்கும் இந்த நான்கு விளக்கங்கள் இருக்கும்:*

1. *அவர்கள் மூப்பர்கள்*
2. *அவர்கள் பிதாவின் சிங்காசனத்தை சுற்றிய சிங்காசனத்தின் மேல் உள்ளனர்*
3. *அவர்கள் வெள்ளை அங்கியை அணிந்துள்ளனர்*
4. *அவர்கள் கிரீடங்களை அணிந்துள்ளனர்*

*வேதாகமத்தில் இந்த நான்கு விளக்கங்களும் பொருந்தக்கூடிய தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட ஒரே ஒரு குழு மட்டும் உள்ளது.*

*அது இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்து சிலுவையில் மறித்த பின்னர் அவரை ஏற்றுக்கொண்ட சபைகால விசுவாசிகளே ஆகும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள்.*

*இது சபை மகா உபத்திரவத்திற்கு முன் இரகசிய வருகையின் போது இயேசு கிறிஸ்துவோடு எடுத்துக்கொள்ளப்படும் என்பதற்கான மற்றுமொரு உறுதியான ஆதாரமாகும்.*